**IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI**

**MCOP. No.139/2016 C/W MCOP.No.153/2016**

Deposition of RW1 solemnly affirmed under Provision Oaths Act 1969(Act 44 of 1969), the 03rd day of March 2023.

| | | | |
|---|---|---|---|
| Name: | மகேந்திரன் | Religion: | இந்து |
| Father's Name: | நல்லபெருமாள் | Caste: | --- |
| Village: | | Calling: | நிர்வாக அலுவலர், தி நியூ இந்தியா அஸ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட், ஈரோடு |
| Taluk: | ஈரோடு | Age: | 33 |

**முதல் விசாரணை** (சத்திய பிரமாணத்தின் பேரில்)

நான் இந்த மனுவில் 2 ம் எதிர்மனுதாரர், ஈரோடு தி நியூ இந்தியா அஸ்யூரன்ஸ் கம்பெனி லிமிட்டில் நிர்வாக அலுவலர் மற்றும் எ.ம.சா.1 ஆவேன். எனது தரப்பு முதன்மை சாட்சிக்காக பிரமாண நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் அதிலுள்ள சங்கதிகள் நான் கூறியவை தான். அதில் நான் படித்து பார்த்து தான் கையொப்பமிட்டுள்ளேன். அதை எனது தரப்பு முதன்மை சாட்சியாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். எனவே மனுவினை தள்ளுபடி செய்ய கேட்டுக்கொள்கிறேன்.

**4 ம் எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

**மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து பற்றி எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான். மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள விபத்து நடந்தது உண்மை என்றால் ஆவணங்களின் அடிப்படையில் உண்மை. இந்த விபத்து தொடர்பாக ஆம்னி கார் ஓட்டுநர் மீது தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி குற்ற வழக்கானது சம்பவத்தை பொறுத்தளவில் பிழை உள்ளது என்று முடித்துள்ளதாக கூறியுள்ளதை பொறுத்து எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான். அந்த குற்ற வழக்கு தற்போது என்ன நிலையில் உள்ளது என்று எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான். என்னுடைய முதன்மை சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் சங்கதிகளை மிகைப்படுத்தி கூறியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

Sd/-தங்கமணி

Sd/-Tmt.S. Uma Maheswari,
Subordinate Judge, Sankari.